1971 டிசம்பர் 17]

புதுசட்டக் கல்லூரி

*496 வினு—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கணபதி : சட்டக் கல்லூரி ஒன்றை மதுரைப் பகுதியில் ஏற்படுத்தி விட்டால் அங்குள்ளவர்கள் இங்கே வந்து படிக்கிற இடையூறு அகற்றப்படும் என்பதைக் கருதியாவது மீண்டும் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றி இரண்டு மூன்று முறை பரிசீலிக்கப்பட்டது. 1970-71-இல் பரிசீலிக்கப்பட்டு நிதி காரணமாக கைவிடப்பட்டது. பிறகும் அதுபற்றி பரிசீலனை வந்து கைவிடப்பட்டது. இடையே சட்டக் கல்லூரி மாணவர்கள் 200 பேர்கள் தூதுக் குழுவாக வந்து இந்த ஒரு கல்லூரியில் படித்து வெளிவருகிறவர்களுக்கே வேலை கிடைக்காமல் இருப்பதனால் மற்றொன்றை ஏற்படுத்த வேண்டாம் என்று கோரினார்கள். அப்படியே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டிருப்பதால் அங்கே ஒரு சட்டக் கல்லூரி ஏற்பட்டாக வேண்டும் என்கிற நிலை வந்தாலும் கூட சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதும் பரிசீலிக்கப்பட்டது. இந்த ஆண்டு அங்கே சட்டக் கல்லூரி ஏற்படுத்துவதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ஆண்டு சட்டக்கல்லூரி அட்மிஷனுக்குத் தேர்வுகுழு ஒன்று வைக்கப்பட்டதே, நெருக்கடி காரணமாகவா அல்லது எந்த அடிப்படையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வந்த காரணத்தினல் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : சட்டக்கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு ஒரு புதிய விடுதி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்களே, அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த விடுதிக்கான நிலம் கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் எடுத்தவுடன் விடுதி கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் நூலகங்கள்

* 497 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய நூலகம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1971 டிசம்பர் 17

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நூலக ஆணைக்குழுக்கள் செயல்பட்டு வரும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மைய நூலகம் ஒன்று எற்கனவே இயங்கி வருகிறது. இதுவே அம்மாவட்டத்திலுள்ள பெரிய நூலகமாகும். எனவே ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய நூலகம் வேறொன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : தற்போதுள்ள மாவட்ட நூலகக் குழுக்களுக்கு மானியத்தை ஓரளவு அதிகப்படுத்திக் கொடுக்க அரசு ஏதேனும் செய்ததா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது 3 பைசா செஸ் என்று இருப்பதை 5 பைசாவாக உயர்த்த வேண்டுமென்று அண்மையில் ஆலோசனைக் குழுவில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த அளவுக்கு அரசாங்கமும் தன்னுடைய ஈட்டுத் தொகையை உயர்த்திக் கொடுக்கும்.

திரு. கா. வேழவேந்தன் : நம்முடைய இந்தியத் துணைக்கண்டத்தில் கல்கத்தாவில்தான் மிகப்பெரிய நூலகம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதுபோன்ற பெரிய நூலகம் ஒன்று சென்னையில் ஏற்பட அரசு அடிப்படை வேலைகளையாவது மேற்கொள்ளுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இந்தியாவில் உள்ள 3 முக்கியமான நூலகங்களில் கன்னிமரா நூலகம் ஒன்றாக இருக்கிறது. இந்தியாவின் எந்தப் பகுதியில் நூல் வெளியிட்டாலும் இங்கே ஒரு காப்பி அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று இருக்கிறது. ஆகவே விரிவுபடுத்துவதானால் கன்னிமரா நூலகத்தைத்தான் விரிவுபடுத்த வேண்டும். தனி நூலகம் அமைக்க அவசியம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : மூன்று காசு செஸ்ஸை 5 காசாக உயர்த்த வேண்டிய அவசியம் என்ன? மூன்று காசாக வசூலிக்கிற நிதியே செலவழிக்கப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அவர்களுக்குக் கொடுக்கிற தொகை போதுமானதாக இல்லை. செஸ் நிதி பலகாலமாக அப்படியே இருக்கிறது. கிளை நூலகங்கள் அதிகமாக வளர்ந்துவிட்டன. நிர்வாகச் செலவுக்கே போதவில்லை. ஆகவே 5 காசாக செஸ் நிதியை உயர்த்தினால் அரசாங்கத்தின் ஈட்டு மானியமும் அதிகமாகும்.

திரு. க. சுப்பு : நூலகங்களில் பத்திரிகை வாங்கிப் போடுவதில் கட்சிப் பாகுபாடு காட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, எல்லாப் பத்திரிகைகளும் வாங்கிப்போட ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபோன்று கட்சிவேறுபாடு காட்டப்படுவதில்லை. சில நூலகங்களில் நூல்களைக் காட்டிலும் அதிகமாக பத்திரிகைகள்தான் வாங்கிப் போடப்படுகின்றன. நிதி அதிகம் இல்லாத இடங்களில் கூட 2, 3 பத்திரிகைகள் வாங்கிப்போடப்படுகின்றன.

1971 டிசம்பர் 17]

திரு. என். கணபதி: தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற கன்னிமாரா லைப்ரரி அகில இந்திய லைப்ரரிகளில் மூன்றாவதாக இடம் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். கன்னிமாரா லைப்ரரியை அதிகப்படியாக விரிவுபடுத்தி புத்தகங்கள் எண்ணிக்கையையும், தரத்தையும் உயர்த்தி, உட்கார்ந்து படிப்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவ்வப்பொழுது நூலகத்தை வளர்ப்பதற்கு முறைப்படியாக என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமோ, அவற்றைச் செய்து வருகிறோம்.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மிகப் பெரிய மாவட்டமான இராமநாதபுர மாவட்டத்தின் ஒரு பகுதியான சிவகெங்கையில் ஒரு பெரிய நூலகம் இருக்கிறது. மற்றொரு பகுதியான சிவகாசியில் அப்படிப்பட்ட மற்றொரு நூலகத்தை அமைத்தால் பொதுமக்களுக்கு சௌகரியமாக இருக்கும் என்கிற காரணத்தினால் இதை அரசு பரிசிலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தில்தான் அதிகமான கிளை நூலகங்கள் இருக்கின்றன. மைய நூலகம் ஒரு மாவட்டத்தின் ஒரு இடத்தில்தான் அமையக் கூடும். மற்ற இடங்களில் கிளை நூலகங்களை அப் பகுதிகளில் தேவைக்கேற்ப விரிவுபடுத்தலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் நூலகங்களுக்குக் கொடுக்கக் கூடிய மானியத்தை உயர்த்தவேண்டுமென்று சொன்னார்கள். இவ்வளவு நாளாகியும் ஏன் உயர்த்தப்படவில்லை?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னபடி அதிகப்படியான முயற்சிகள் இப்போது எடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று காசாக இருந்த செஸ்ஸை 5 காசுகளாக உயர்த்தியிருக்கிறோம். அரசாங்கம் கொடுக்கும் மான்யமும் 3 காசுலிருந்து 5 காசுகளாக உயர்த்திக் கொடுக்க இருக்கிறோம்.

திரு. இரா. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, நூலக ஆணைக் குழுவிற்கு நகர மன்றங்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் காலாகாலத்தில் கொடுக்கவில்லை. அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எந்த நூலகத்திற்காவது அப்படிக் கொடுக்கப்படாமல் இருக்குமானால், அது குறித்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நாற்பது நிமிடங்களில் பத்து கேள்விகள்தான் முடிவடைந்திருக்கின்றன. இன்னும் பாக்கி 40 கேள்விகள் இருக்கின்றன. ஆகவே, இனி, துணைக் கேள்விகள் குறைந்த அளவில்தான் அனுமதிக்கப்படும்.